(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டே இருந்தனர்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

அதாவது, கவன ஈர்ப்பு அறிவிப்பு, நேற்றைக்குக் காலையில் கொடுத்தார்கள். நான் அரசினுடைய பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன் என்று தி.மு.க. கொறடாவிடம் தெளிவாகத் தெரிவித்தேன். ஆனாலும், தி.மு.க. கொறடா, என்னிடத்திலே என்ன கேட்டார் என்று சொன்னால், இல்லை, தகவல் கோரல் என்கிற முறையிலே Zero Hour–ல் நாங்கள் அதை raise செய்கிறோம். அதை raise செய்வதற்கு எங்களுக்கு அனுமதி கொடுங்கள். மாண்புமிகு அமைச்சரிடம் ஏதாவது பதில் இருந்தால், சொல்லட்டும் என்று என்னிடத்திலே தெரிவித்ததனுடைய அடிப்படையிலேதான், அவர்கள் கொடுத்த அந்த கவன ஈர்ப்பைக்கூட எடுத்துக்கொள்ளாமல், தகவல் கோரல் என்ற முறையிலே அவர்களுக்கு நான் அனுமதியை வழங்கினேன். ஆனால், அதற்கான அனுமதியை இன்றைக்கு அவர்களுக்குக் கொடுத்ததற்குப் பின்னரும், அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைத் தெரிவித்துவிட்டார்கள். அவ்வாறு தெளிவான பதிலைத் தெரிவித்த பின்னரும் இவ்வாறு நடந்து கொள்வது முறையற்ற செயல். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

முற்பகல் 11–10

3. கவன ஈர்ப்பு

பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையம், பாளையங்கால்வாயைப் புனரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 17]

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்திலுள்ள பாளையங்கால்வாயில் நீர்ச் செடிகளை அகற்றவும், கழிவு நீர் விடுவதைத் தடுக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

பாளையங்கால்வாய் தமிழ்நாடு பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். பாளையங்கோட்டை தொகுதியில் மேலப்பாளையம், பாளையங்கோட்டை நகரங்களின் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள பாளையங்கால்வாயில் சாக்கடை, கழிவு நீர் கலப்பதைத் தடுக்கும் விதமாக, மேற்படி பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற அம்ரூத் 2016–2017 (AMRUT) *திட்டத்தின்கீழ் மதிப்பீடு ரூ.290 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, கருத்துரு அனுப்பப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.*

மேலும், மேலப்பாளையம் மண்டலப் பகுதியில் தெருக்களின் பின் பகுதிகளிலிருந்து வாய்க்காலில் கலக்கும் கழிவு நீரைத் தடுக்கும் விதமாக, 12 தெருக்களில் 4.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு மதிப்பீடு சுமார் ரூ.117 இலட்சத்தில் கழிவு நீரோடைகள் கட்டும் பணிகள் தற்பொழுது முடிவுற்றுள்ளன. மேலும், கூடுதலாக 34 தெருக்களில் 7.18 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவு நீரோடைகள் கட்டும் பணிக்காக மதிப்பீடு ரூ.470 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மேல் நடவடிக்கையில் உள்ளது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2016 ஆகஸ்ட் 17

திருநெல்வேலி மாநகராட்சி பொதுச் சுகாதாரப் பணியில் 494 நிரந்தரப் பணியாளர்கள்மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சுகாதாரத்தினை மேம்படுத்தும் விதமாக கூடுதலாக சுய உதவிக் குழுக்கள்மூலம் 598 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படி வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்கள் மேற்படி பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன:

1. காம்பக்டர் லாரி 4 எண்ணம்
2. கன்டெய்னர் லாரி 8 எண்ணம்
3. டிப்பர் லாரி 8 எண்ணம்
4. பேட்டரி கார் 7 எண்ணம்
5. டிராக்டர் 1 எண்ணம்
6. காம்பக்டர் பின் 485 எண்ணம்
7. டம்பர் பின் 240 எண்ணம்
8. டிரை சைக்கிள் 358 எண்ணம்

இம்மாநகராட்சியில் தினசரி உற்பத்தியாகும் 180 மெட்ரிக் டன் குப்பைகளைச் சேகரித்து இராமையன்பட்டி உரக் கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது.

இதில் மேலப்பாளையம் மண்டலப் பகுதியில் மட்டும் தினசரி உருவாகும் 60 மெட்ரிக் டன் குப்பைகள் (பீடிக் கழிவுகள் உள்பட) மேற்கூறப்பட்ட வாகனங்கள்மூலம் அகற்றப்பட்டு சிறப்பான முறையில் பொதுச் சுகாதாரம் பேணப்பட்டு வருகிறது.

திடக் கழிவு மேலாண்மைத் திட்ட நிதியின்கீழ் இராமையன்பட்டி உரக் கிடங்கில் சேகரிக்கப்பட்டு வரும் குப்பைகளை விஞ்ஞான முறையில் மூடாக்கம் (Scientific Closure) செய்யும் பணி ரூ.8.16 கோடியில் நடைபெற்று, பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும், இராமையன்பட்டி உரக் கிடங்கில் சேகரிக்கப்படும் மாநகராட்சி குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டப் பணியை மேற்கொள்ள விரைவில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த அறிக்கையில் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது, பாளையங்கால்வாய் தமிழ்நாடு பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது. நான் சொல்ல வந்த முக்கியமான பிரச்சினையைப் பற்றி விவர அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். பாளையங்கால்வாயில் பாபநாசம் அணையிலிருந்து வருகின்ற தண்ணீர், பழவூர் அணையிலிருந்து கடைமடையான நொச்சிகுளம் வரை கிட்டத்தட்ட 43 கி.மீ. தூரத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்தக் கால்வாயின்மூலம் கிட்டத்தட்ட 10,000 ஏக்கரில் விவசாயம் செய்து விவசாயிகள் பயனடைந்துகொண்டிருக்கிறார்கள். அந்த 43 கி.மீட்டருக்கும் cement lining தேவை என்பதையும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி கேட்கும் வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாநகராட்சி எல்லைப் பகுதிக்குள் கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய் மற்றும் நெல்லை கால்வாய் ஆகிய 3 கால்வாய்கள் சுமார் 15 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளன. இந்த 3 கால்வாய்களும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நெல்லை கால்வாயில் 2 கி.மீ. நீளத்திற்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் தூர் வாரும் பணிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுமார் 8 கி.மீ. நீளமுள்ள பாளையங்கால்வாயில் வருடத்திற்கு 8 முதல் 9 மாதங்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர்

திறந்துவிடப்படுகிறது. இக்கால்வாயில் ஒரு சில இடங்களில் அவ்வப்போது தோன்றும் நீர்ச் செடிகளை பொதுப் பணித் துறை, திருநெல்வேலி மாநகராட்சியுடன் இணைந்து அகற்றி, சுத்தம் செய்துவருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பாளையங்கால்வாயில் தூர் வாரும் பணிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.*

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்லியிருக்கின்றார். அவர் குறிப்பிட்ட 8 கி.மீ. தூரத்தில், பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் நகர குடியிருப்புப் பகுதிகள் மிக அருகில் இருக்கின்றன. ஏற்கெனவே, அந்தக் கால்வாயில் எப்பொழுதும் தண்ணீர் தேங்கி நிற்பதால் அமலைச் செடிகள், நீர்ப் பாசிகள், ஆகாயத்தாமரை போன்றவை நிறைந்து காணப்படுகின்றன. அதில் நகரக் கழிவுகளும் வந்து சேரும்போது, அது கிட்டத்தட்ட குப்பை நீர் வங்கியாகவே அல்லது சாக்கடை நீர் வங்கியாகவே மாறிவிடுகிறது. அங்கிருந்து கொசுக்கள் வியாதிகளைப் பரப்புகின்றன. இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில், சுகாதாரப் பணியில் 494 பணியாளர்களும், சுய உதவிக் குழுக்கள்மூலம் 598 பணியாளர்களும் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஊரில் ஏற்கெனவே அதிகமான பணிகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களும், மாணபுமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, போர்க்கால அடிப்படையில், 43 கி.மீட்டருக்கான பணிகள் ஒரு பக்கம் இருந்தாலும், 8 கி.மீட்டருக்காவது உடனடியாக லைனிங் செய்து, சாக்கடையில் குப்பைகள் சேராமல் பாதுகாத்து, அந்த மக்களை சுகாதாரக்கேட்டிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 17] [திரு. டி.பி.எம். மைதீன்கான்]

விவர அறிக்கையில், மாநகராட்சியில் மொத்தமுள்ள 55 வார்டுகளில் 180 மெட்ரிக் டன் குப்பைகள் தினமும் சேருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 10 வார்டுகள் உள்ள மேலப்பாளையம் பகுதியில் மட்டுமே 60 மெட்ரிக் டன். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் பொறுங்கள். உறுப்பினர் கேள்வியை முடிக்கட்டும். மாண்புமிகு திரு. மைதீன்கான், கேள்வியை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கணக்கின்படி, 55 வார்டுகளுக்கே 180 மெட்ரிக் டன் அளவுதான் குப்பை சேருகிறது. மேலப்பாளையத்தில் 10 வார்டுகளில் 60 மெட்ரிக் டன் அளவு குப்பை சேருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அந்தப் பகுதியில் ** இருக்கிறது. அந்த மக்களுடைய நன்மையைக் கருதித்தான் சொல்கிறேனே தவிர, அந்தச் சாக்கடை நிரந்தரமான சாக்கடையாக இருக்கின்ற காரணத்தினால் ** குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மேலப்பாளையம். . .*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மைதீன்கான், அதெல்லாம் தேவையில்லை. அதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நான் பேசுகின்றபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 15 கோடி ரூபாய் நிதியொதுக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பாளையங்கால்வாயில் பொதுமக்கள் குப்பை கொட்டுவதைத் தவிர்க்கும்பொருட்டு, அதன் இருபுறமும் கம்பி வேலி அமைக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கால்வாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 290 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு நிதி மற்றும் அம்ரூத் திட்டத்தின்கீழ், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மேலப்பாளையம் பகுதியில் தெருக்களின் பின்பகுதியிலிருந்து வாய்க்காலில் கலக்கும் கழிவுநீரைத் தடுக்கும்விதமாக, 12 தெருக்களில், 4.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு, ரூபாய் 1 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஓடைகள் கட்டப்பட்டுள்ளன என்பதையும் பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மேலும் 34 தெருக்களில், 7.18 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் ஓடைகள் கட்டுவதற்கு 4 கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி பாசனத் திட்டத்தில் ஐந்தாவது அணைக்கட்டான பழவூர் அணைக்கட்டிலிருந்து பாளையங்கால்வாய் ஆரம்பித்து சுமார் 42 கிலோ மீட்டர் செல்கின்றது. இதனுடைய பாசனப் பரப்பு 9,400 ஏக்கர் நிலமாகும். பாளையங்கோட்டை தொகுதியில் இந்தக் கால்வாயின் நீளம் 30 கிலோ மீட்டராகும். 2016–2017 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்து பாளையங்கால்வாயில் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதற்கு முன்பாகவே ரூபாய் 16 இலட்சம் செலவில் தூர்வார மற்றும் செடி கொடிகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், நீர்வள, நிலவளத் திட்டம் II–ன்கீழ் பாளையங்கால்வாய் மற்றும் குளங்களை புனரமைக்கும் பணிக்காக திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.